

THINK **INTEGRITY** BUILD **TRUST**

# SGS நேர்மை விதித்தொகுப்பு

SGS.COM


SGS

# உள்ளடக்கம்

இயக்குனரவை தலைவர் மற்றும் CEO ஆகியோரிடமிருந்து செய்தி 5
SGS நேர்மை கலாச்சாரம் 6
SGS நேர்மை விதித்தொகுப்பு அமல்படுத்தல் 7
SGS நேர்மை விதித்தொகுப்பு விதிகள் 8

**வணிகத்தை நடத்துதல் 9**

சேவையின் நேர்மை 9
சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்கள் 9
ஆதாய முரண்பாடு 10
பரிசுகள், பொழுதுபோக்கு மற்றும் உபசரிப்பு 11
நியாயமான போட்டி 11
நன்கொடைகள் மற்றும் ஸ்பான்சர்ஷிப்கள் 11

**சொத்துகளைப் பாதுகாத்தல் 13**

வணிக சொத்துகள் மற்றும் வளங்கள் 13
வணிகப் பதிவுகளில் நேர்மை 13
வெளிப்புறத் தகவல் தொடர்பு 14

**மரியாதையுடன் செயல்படுதல் 15**

தொழிலாளர் உறவுகள் 15
ஒடுக்குதல் மற்றும் தொந்தரவிழைத்தல் 15
பாகுபாடு காட்டாமல் இருத்தல் 15
தரவுத் தனியுரிமை 15
உடல்நலம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் 16

**சட்டங்களுக்கு இணங்குதல் 17**

சட்டங்களுடனான இணக்கம் 17
ஊழல் எதிர்ப்பு 17
உள்ளாள் வணிக மோசடி 17
தடைகள் மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகள் 18
பணச்சலவை மற்றும் குற்றங்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் நிதியளித்தல் 18


SGS
SGS
SGS
SGS

# இயக்குனரவை தலைவர் மற்றும் CEO ஆகியோரிடமிருந்து செய்தி

அன்பார்ந்த சக பணியாளர்களே,

## SGS வணிகத்தில் நேர்மையே முக்கிய அங்கமாகும். நம்முடைய வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களிடம் நாம் உத்வேகமளிக்கின்ற நம்பிக்கையே ஒரு நிறுவனமாகவும் தனிநபர்களாகவும் நம்முடைய வெற்றிக்கான திறவுகோலாக விளங்குகிறது.

நமது தொழில்துறையில் முன்னிலையில் இருப்பவர்கள் என்ற முறையில் நாம் நம்முடைய அனைத்து வணிகச் செயல்பாடுகளிலும் தொழில்முறை நடத்தையின் உயர்ந்த தரநிலையையும் நேர்மையையும் கடைபிடிக்கிறோம்.

நம்முடைய நேர்மை விதித்தொகுப்பே நமது செயல்பாடுகளுக்கான அடித்தளத்தை அமைத்திருக்கிறது என்பதுடன் SGS முழுவதிலும் அதனுடைய பல்வேறு வணிகங்கள் மற்றும் இணை நிறுவனங்களிலும் பகிர்ந்துகொள்ளப்படுகின்ற மைய மதிப்பீடுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. சிக்கலான சூழ்நிலைகளைக் கடந்துசெல்ல நமக்கு முடிவெடுக்க உதவுவதற்காக இந்த விதித்தொகுப்பே வழிகாட்டியாகச் செயல்படுகிறது.

SGS பிராண்ட் மற்றும் நற்பெயரின் பாதுகாவலர்களாக நாம்தான் இருக்கிறோம், சந்தையில் அவை வெளிப்படுத்தும் மதிப்பீடுகளைப் பாதுகாக்க நாம்தான் இடைவிடாமல் பெருமுயற்சி செய்கிறோம். இந்த நிலை வரையிலும், நாம் ஒருவருக்கொருவரும், நமது வாடிக்கையாளர்கள் மற்றும் நமது கூட்டாளர்களுடனும் ஒருங்கிணைந்து செயல்படுவதில் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நடந்துகொள்ளும் பொறுப்பை ஏற்றிருக்கிறோம்.

இந்தப் பொறுப்பேற்பின் ஒரு பகுதியாகக் கருத்தாக்கங்கள் மற்றும் தகவல்களை நாம் பகிர்ந்துகொள்கின்ற, அறிவுரை கோரவும் திரும்பத் தாக்கப்படுவோம் என்ற அச்சமின்றி அக்கறைக்குரிய விஷயங்களை வெளிப்படுத்தவும் செய்கின்ற ஒரு வெளிப்படையான கலாச்சாரத்தையே நாம் ஊக்கப்படுத்துகிறோம்.

SGS கொள்கைகளுடன் நமது செயல்பாடுகளை இணக்கமாக வைத்துக்கொள்ள SGS நேர்மை விதித்தொகுப்பு நமக்கு உதவுகிறது. நாம் ஒன்றாகச் சேர்ந்து நேர்மையின் உயர் தரநிலைகளை நம்மால் தக்கவைக்க முடியும் என்பதுடன் ஒரு சிறந்த, பாதுகாப்பான மற்றும் ஒன்றோடொன்று மிகச்சிறந்த தொடர்புகொண்டுள்ள உலகை சாத்தியமாக்கவும் முடியும்.

**Calvin Grieder**
Chair of the Board of Directors

**Géraldine Picaud**
Chief Executive Officer

# SGS நேர்மை கலாச்சாரம்

## அறம்சார் கொள்கைகள்

### நம்பிக்கை

நம்பிக்கை என்பது நம்முடைய மிகவும் மதிப்பு வாய்ந்த ஒரே சொத்து, நம்முடைய பிராண்ட் மற்றும் கௌரவத்தின் அடித்தளம். வாடிக்கையாளர்களும் மூன்றாம் தரப்பினரும் நம்முடைய நேர்மையில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதுடன் இந்த நம்பிக்கை பேணி வளர்க்கப்பட்டு நாளுக்கு நாள் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. இது சட்டென்று இடர்பாட்டிற்கு உள்ளாகும் வாய்ப்பு கொண்டது.

### நேர்மையும் வெளிப்படைத் தன்மையும்

நாம் செய்கின்ற அனைத்திலும் நமக்கும், நம்முடைய சக பணியாளர்களுக்கும், வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கும் நாம் உண்மையாக இருந்தாக வேண்டும்.
எந்தச் சூழ்நிலையிலும் பொய்கள், ஏமாற்றுதல் அல்லது நேர்மையின்மையை நியாயப்படுத்துதல் கூடாது.

### நம்பகத்தன்மை

நம்முடைய செயல்பாடுகள் மற்றும் கவனக்குறைவுகள் ஒவ்வொன்றிற்கும் எதிர்விளைவுகள் உண்டு.
நம்முடைய தேர்வுகளுக்கான எதிர்வினைகளை நாமே ஏற்றுக்கொள்ள வேண்டும், நம்முடைய செயல்களுக்காக நாம் மற்றவர்கள் மீது பழிபோடுதல் கூடாது.

### பாகுபாடின்மை

நாம் நியாயத்துடனும் பக்கச் சார்பற்றும் அறம்சார்ந்து நடந்துகொள்வதில் நம்பிக்கை வைத்துள்ளோம்.
நாம் எடுக்கும் முடிவுகள் நமது கொள்கைகள் மற்றும் நல்ல நடத்தையின் தரநிலைகளின் அடிப்படையில் வழிகாட்டப்படுபவையே தவிர ஒருதலைபட்சமான தேர்வுகள் அல்லது தனிப்பட்ட விருப்பங்களின் அடிப்படையில் அமைபவை அல்ல.

## சரியான கேள்விகளை உங்களிடமே கேளுங்கள்

ஒரு குறிப்பிட்ட செயல்பாடு குறித்து சந்தேகம் எழுந்தால், பின்வரும் கேள்விகளை உங்களிடமே கேட்டுக்கொள்ளுங்கள்:

- ஒரு குறிப்பிட்ட செயல்பாடு சட்டவிரோதமானது அல்லது நெறிமுறைக்கு மாறானது என நான் சந்தேகப்படலாமா?
- இந்தச் செயல்பாடு குறித்து ஊடகத்தில் செய்தி வந்தால் அல்லது எனது குடும்பம் மற்றும் நண்பர்களுடன் இதைப் பற்றி நான் பேசியிருந்தால் எப்படி இருக்கும்?
- இந்த செயல்பாடானது பொய்யுரைத்தல் அல்லது உண்மையாக இல்லாதிருத்தலுடன் சம்பந்தப்பட்டதா?
- இந்த செயலானது மற்றவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு, பாதுகாவல் அல்லது உடல் நலத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடுமா?
- இந்த செயலானது SGS அல்லது அதனுடைய கௌரவத்திற்குச் சேதாரத்தை ஏற்படுத்தக்கூடுமா?
- இந்த செயல்பாட்டிற்கு சட்டப்பூர்வமான வணிக நோக்கம் உள்ளதா?

இந்த செயல்பாடானது இந்தக் கேள்விகளுக்குத் தகுந்த பதிலளிக்கத் தவறினால், உங்களுக்கு வழிகாட்டுதல் தேவை என்பதுடன் உங்களுடைய முடிவை நீங்கள் மறுபரிசீலனை செய்தாக வேண்டும்.



# SGS நேர்மை விதித்தொகுப்பு அமல்படுத்தல்

## விதித்தொகுப்பில் நம்பிக்கை வைத்தல்

SGS இன் வெற்றியானது தான் வணிகத்தை நடத்துகின்ற சமூகங்களில் உள்ள வாடிக்கையாளர்கள், பணியாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் பிற பங்களிப்பாளர்களிடமிருந்து நாளுக்கு நாள் ஈட்டுகின்ற நம்பிக்கையிலேயே அடங்கியிருக்கிறது.

இந்த நேர்மை விதித்தொகுப்பை திறன்மிக்க வகையில் அமல்படுத்துவதன் வழியாகவே இந்த நம்பிக்கையை தக்கவைப்பதில் SGS கவனம் செலுத்துகிறது.

## விதித்தொகுப்பின்படி நடந்துகொள்ளுதல்

இந்த விதித்தொகுப்பானது பணியாளர்கள், அதிகாரிகள் மற்றும் SGS SA மற்றும் அதனுடைய இணை நிறுவனங்களின் இயக்குனர்கள் என அனைவருக்கும் பொருந்தும்.

SGS சார்பாகச் செயல்படுகின்ற அல்லது பிரதிநிதித்துவம் செய்கின்ற மூன்றாம் தரப்பினர்களும் இந்த விதித்தொகுப்பின் அனைத்து அம்சங்களையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும், இதில் SGS மற்றும் அதனுடைய பணியாளர்களைக் குறிக்கின்ற அனைத்தும் அடங்கும்.

## விதித்தொகுப்பை புரிந்துகொள்ளுதல்

விதித்தொகுப்பை படித்துப் புரிந்துகொண்டு, அதனுடைய கொள்கைகளை உறுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டியது SGS பணியாளர் ஒவ்வொருவரின் தனிப்பட்ட பொறுப்பாகும்.
அவ்வப்போது நடக்கும் நேர்மை பயிற்சியில் பங்கேற்குமாறு பணியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
நிர்வாகப் பதவிகளில் இருக்கும் பணியாளர்களும்கூட நேரடி அறிக்கைகள் யாவும் முறையாகப் பயிற்சியளிக்கப்பட்டவை என்பதை உறுதிப்படுத்த வேண்டும், பயிற்சிப் பாடத்தின் உள்ளடக்கத்தை முழுமையாகப் புரிந்துகொண்டு இந்த விதித்தொகுப்பிற்கு உடன்படவும் நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

## விதித்தொகுப்பை டைமுறைப்படுத்துதல்

நேர்மை விதித்தொகுப்பானது SGS SA இயக்குனரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, அவைதான் அதனால் நியமிக்கப்படுகின்ற வேறு எந்த மேற்பார்வை அமைப்புடனுடம் சேர்ந்து விதித்தொகுப்பு அமலாக்கப்படுவதை கண்காணிக்கிறது.

SGS குழுமத்தின் தலைமை உடன்பாட்டு அதிகாரிதான் SGS குழுமம்-வாரியான உடன்படுதல் வியூகங்களைத் தீர்மானிக்கிறார் என்பதுடன் உடன்படுதல் நிபுணர்களின் நெட்வொர்க் வழியாக SGS நேர்மை திட்டத்தை நிர்வகிக்கின்ற வணிக நெறிமுறைகள் செயல்பாட்டை மேற்பார்வை செய்கிறார்.

இந்த விதித்தொகுப்பானது 2024, மே மாதம் முதல் நடைமுறைக்கு வருகிறது என்பதுடன் முந்தைய 2012 பதிப்பிற்கு மாற்றானதாகும்.

SGS இணை நிறுவனங்களானவை இந்த விதித்தொகுப்பில் அடங்கியிருக்கும் பகுதிகளில் மிகவும் விரிவான அல்லது கட்டுப்படுத்தும் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகப் பதவிகளில் இருக்கும் பணியாளர்களும் தங்களுடைய மேற்பார்வையில் உள்ள பணியாளர்கள் நேர்மையுடன் நடந்துகொள்ளுதல் மற்றும் விதித்தொகுப்பிற்கு உடன்படுதலை உறுதிப்படுத்தியாக வேண்டும்.

## விதித்தொகுப்பு குறித்த வழிகாட்டுதலை நாடுதல்

நேர்மை மற்றும் தொழில் நெறிமுறை விவகாரங்கள் ஏற்படக்கூடிய இடங்களில் வெளிப்படையாக ஆலோசிக்கும் கலாச்சாரத்திற்கு SGS பொறுப்பேற்றுள்ளது.

விதித்தொகுப்பை பணியாளர்கள் புரிந்துகொள்ளவும், அறம்சார் தடுமாற்றங்களை எதிர்கொள்ளும்போது சரியான முடிவுகளை எடுக்க அவர்களுக்கு உதவவும் வழிகாட்டுதலும் ஆதரவும் கிடைக்கின்றன. வழிகாட்டுதல் கோருகின்ற அல்லது கவலைகளை எழுப்புகின்ற யாருக்கும் பதிலளிக்க வேண்டும் எனவும் அவர்கள் சொல்வதை தீவிரமாக எடுத்துக்கொண்டு ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் நிர்வாகப் பதவிகளில் இருக்கும் பணியாளர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது.

விதித்தொகுப்பின் அர்த்தம் அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அதனை பயன்படுத்துவது குறித்து சந்தேகம் ஏற்படும்போது, SGS பணியாளர்கள் SGS நேர்மைசார் உதவி எண்ணை பயன்படுத்துமாறு ஊக்கப்படுத்தப்படுகிறார்கள், இந்த உதவி எண்ணானது பல மொழிகளில் கேள்விகள் கேட்டு வழிகாட்டுதலைப் பெறுவதற்கான பல்வேறு விருப்பத்தேர்வுகளை வழங்குவதுடன் அவற்றை அடையாளம் தெரியாதவாறும் பார்த்துக்கொள்கிறது.

## விதித்தொகுப்பின் விதிகளை பின்பற்றுதல்

சிறியதாக இருந்தாலும்கூட இந்த விதித்தொகுப்பை எந்த வகையிலும் மீறுவது SGS இன் நற்பெயர் மற்றும் பிராண்டை பாதிக்கும் என்பதுடன் அது பொறுத்துக்கொள்ளப்படாது. விதித்தொகுப்பை மீறுதல் ஒழுங்குமுறை நடவடிக்கைக்குக் காரணமாகலாம், இதில் வேலையைவிட்டு நீக்குதல் மற்றும் தீவிரமான மீறல்களுக்குக் குற்றவியல் வழக்குத்தொடுத்தல் ஆகியவையும் அடங்கும்.

## விதித்தொகுப்பு மீறலை புகாரளித்தல்

SGS பணியாளர்களும் மூன்றாம் தரப்பினர்களும் வெளிப்படையாகப் பேசுவதற்கும், சந்தேகத்திற்குரிய அல்லது விதித்தொகுப்பு மீறப்பட்டுள்ளது என்று தெரிந்ததை புகாரளிப்பதற்கும் SGS நேர்மைசார் உதவி எண்ணை பயன்படுத்துமாறு ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். இது பல்வேறு மொழிகளில் புகாரை பதிவுசெய்தலுக்கான பலவித விருப்பத்தேர்வுகளை வழங்கும் ஒரு பாதுகாப்பான தளமாகும். புகார்களை அடையாளம் தெரியாதவாறு தாக்கல் செய்யலாம்.

வழங்கப்பட்ட தகவல்கள் எதுவும் பாதுகாக்கப்பாகச் சேமிக்கப்படும் என்பதுடன் மிகவும் ரகசியமாக வைக்கப்படும்.

நிர்வாகப் பதவிகளில் இருக்கும் பணியாளர்களிடம் விதித்தொகுப்பு மீறல் சந்தேகம் என அல்லது தெரிந்த மீறல் என புகார் அளிக்கப்பட்டால் அவர்கள் அவற்றை பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு ஏற்ப அவர்களுக்கும் மேல் பதவியில் உள்ளவர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

## பழிவாங்காமை

அறிவுரை கோருதல், கவலைகள் எழுப்புதல் மற்றும் விதித்தொகுப்பு மீறல் குறித்து நல்லெண்ணத்தின் அடிப்படையில் புகாரளித்தலுக்காக பழிவாங்கப்படுதல் அல்லது எதிர்மறையான பின்விளைவுகளின் எந்த வடிவத்தில் இருந்தும் பணியாளர்களை SGS பாதுகாக்கிறது. நல்லெண்ணத்தின் அடிப்படையில் விதித்தொகுப்பு மீறல்களை புகாரளித்தமைக்காக SGS பணியாளருக்கு எதிரான பழிவாங்குதல் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் அது ஒழுங்குமுறை நடவடிக்கை எடுப்பதற்கு காரணமாக அமையும்.

கேள்வி கேட்க, வழிகாட்டுதல் பெற, கவலையை எழுப்ப அல்லது நேர்மை விதிமீறலை புகாரளிக்க இங்கே செல்லவும்: http://integrityhelpline.sgs.com.

# SGS நேர்மை விதித்தொகுப்பு விதிகள்



# வணிகத்தை நடத்துதல்

## சேவையின் நேர்மை

### சேவை வழங்கல்

SGS சேவைகள் அனைத்தும், பொருந்தக்கூடிய SGS குழுமக் கொள்கைகள், தரநிலைகள் மற்றும் செய்முறைகளுக்கு இணக்கமான விதத்தில், தொழில்முறை நேர்த்தியுடனும் நேர்மையுடனும் வழங்கப்பட வேண்டும்.

SGS அதன் முடிவெடுக்கும் தன்மையின் சுயாதீனத்தை தக்கவைத்துக்கொள்கிறது என்பதுடன் கண்டுபிடிப்புகளைத் தவறாகச் சித்தரிக்க அல்லது அதன் ஆய்வுகள், சான்றிதழ்கள், தணிக்கைகள் அல்லது சோதனை முடிவுகளை மாற்றுகின்ற நெருக்கடி மற்றும் தூண்டுதல்களுக்குச் செவிசாய்க்காது. அனைத்து கண்டுபிடிப்புகளும் போதுமான அளவுக்கு ஆவணமாக்கப்பட வேண்டும் என்பதுடன் உண்மையற்ற அல்லது தவறாக வழிகாட்டும் புகார்கள் அல்லது சான்றளிப்புகள் எதுவும் வழங்கப்படக் கூடாது.

### செயல்முறை நேர்மை

நேரடியாகவும் டிஜிட்டல் வடிவிலும் SGS மேற்கொண்ட சேவைகள் தொடர்பான அனைத்து ஆவணமாக்கலும் முழுமையாகவும் துல்லியமாகவும் இருந்தாக வேண்டும், அவை பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு இணங்க பராமரிக்கப்பட்டு ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்ட வேண்டும். எத்தகைய திருத்தம், மாற்றுதல், சேர்த்தல், நீக்குதல் போன்றவை உட்பட இத்தகைய ஆவணங்களை அனுகுதலானது பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு இணங்க பதிவு செய்யப்பட வேண்டும்.

### சேவை நிபுணத்துவம்

திறமைகள், அறிவு மற்றும் தகுதிநிலைகள் உள்ளிட்ட SGS இன் மையத் திறன்கள் அதனுடைய சேவைகளை வெற்றிகரமாக வழங்கிட தேவையானவை என்பதுடன் வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களிடத்தில் மதிப்பை ஏற்படுத்துகின்றன. SGS பணியாளர்கள் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் எனவும், தங்களுடைய தகுதிநிலைகள் குறித்து வெளிப்படையாக இருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தகுதிநிலைகள், நற்பெயர்களைத் தவறாகக் குறிப்பிடுதல் அல்லது அவற்றை ஏமாற்றியோ பிற மோசடியான வழிமுறைகளிலோ பெற்றிருத்தல் என்பது நெறிமுறைக்கு மாறானதாக, நேர்மையற்றதாகக் கருதப்பட்டு முற்றிலும் தடைசெய்யப்படுகிறது.

## சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்கள்

### கவனமான தேர்வுசெய்யும் நடைமுறை

பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்திருக்கும் சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களுடன் நீண்ட கால கூட்டுறவுகளை பாதுகாப்பதை SGS நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

ஒத்துப்போகின்ற கார்ப்பரேட் மதிப்பீடுகளையும், நீடித்து நிலைக்கும்படியான இலக்குகளையும் வைத்தே தனது சப்ளையர்களையும் வணிகக் கூட்டாளர்களையும் SGS தேர்ந்தெடுக்கிறது.
வணிகம் நேர்மையாக நடத்தப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவதற்காக சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களை SGS மேற்பார்வை செய்கிறது.

### பண்டங்கள் மற்றும் சேவைகளை வாங்குதல்

சப்ளையர்களிடமிருந்து பண்டங்கள் மற்றும் சேவைகளை வாங்குதலுக்கும் SGS பணியாளர்களே பொறுப்பாளிகள் ஆவர், அல்லது வணிகக் கூட்டாளர்களைத் தேர்ந்தெடுத்தலானது, சப்ளையர் அல்லது வணிகக் கூட்டாளரின் தரம் மற்றும் நற்பெயரைக் கருத்தில் கொண்டு, சிறந்த ஒட்டுமொத்த மதிப்பை பாதுகாக்கும் ஒரே நோக்கத்துடன் அவ்வாறுதான் செய்யப்பட வேண்டும்.

தனிப்பட்ட விருப்பங்களின் அடிப்படையில் சப்ளையர்கள் அல்லது வணிகக் கூட்டாளர்களுக்கு SGS ஒப்பந்தங்கள் எதையும் வழங்குவதில்லை.

தனக்காகவோ எந்தவொரு மூன்றாம் தரப்புக்காகவோ, SGS-க்கு பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குகின்ற சப்ளையர், வணிகக் கூட்டாளர் அல்லது நிறுவனத்திடம் எவ்விதத்திலும் அனுகூலம் செய்யுமாறு கேட்பது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

### அங்கீகரிக்கப்பட்ட செயல்முறை

சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களை ஈடுபடுத்துதலுக்கு பொருந்தக்கூடிய SGS குழும கொள்களுக்கு இணங்க அனுமதி தேவைப்படுகிறது.



# ஆதாய முரண்பாடு

## பொதுவான கொள்கைகள்

SGS பணியாளரின் தனிப்பட்ட நலன்கள் அல்லது அவர்களுடைய நெருங்கிய உறவினர் அல்லது நெருங்கிய நண்பரானவர் பணியாளரின் தீர்மானம், நோக்கம், சுயாதீனம் அல்லது SGSக்கான உண்மைத்தன்மையுடனும் குறுக்கிடும்போது ஆதாய முரண்பாடு எழுகிறது.

SGS பணியாளரின் நெருங்கிய உறவினர் என்போரை அவரது வாழ்க்கைத்துணை, பிள்ளை, பேரப்பிள்ளை, பெற்றோர், தாத்தா பாட்டி, இரத்த உறவுகள், சகோதரர் அல்லது சகோதரரின் மனைவி, மகன் அல்லது மருமகள், மாமன், அத்தை, ஒன்றுவிட்ட சகோதர, சகோதரி, மாமன் மகள் மற்றும் அந்தப் பணியாளருடன் வசிக்கின்ற எந்த நபரும் என வரையறுக்கலாம்.

பணியாளர்கள் சாத்தியமுள்ள நல முரண்கள் அனைத்தையும் பற்றி உடனடியாக எழுத்துவடிவில் தங்களது மேலாளர்களுக்கு அறிவித்து, அந்த சாத்தியமுள்ள நல முரண்களால் தாம் பாதிக்கப்பட்டிருக்கும் காலம் வரை முடிவெடுக்கும் செயல்கள் எதிலும் ஈடுபடாமல் விலகியிருக்க வேண்டும்.

## குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கான குறிப்பிட்ட தேவைகள்

ஆதாய முரண்பாடுகள் தோன்றுகின்ற சூழ்நிலைகளைத் தவிர்க்கப் பணியாளர்கள் குறிப்பிட்ட தேவைகளைப் பரிசீலிக்க வேண்டும். குறிப்பிட்ட சூழ்நிலைகளில் கடுமையாகத் தடைசெய்தல் அல்லது பிற நிகழ்வுகளில், பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு இணங்க முன்கூட்டி அனுமதியளித்தல் ஆகியவை இதில் அடங்கும்.

## பாகுபாடற்ற சேவை

பணியாளர்களோ அவர்களது நெருங்கிய உறவினர்களோ குறிப்பிடத்தக்க அளவில் பங்குகள் வைத்திருக்கின்ற அல்லது பிற நிதிசார் நலன்களைக் கொண்டிருக்கின்ற, வாங்குதல், நிர்வாகம் அல்லது இயக்குனர் பதவியில் இருக்கின்ற தற்போதுள்ள வாடிக்கையாளர் அல்லது SGS வாடிக்கையாளராக சாத்தியமுள்ளோருக்கு சேவைகள் வழங்குதலில் எந்த வகையிலும் ஈடுபட்டிருப்பது SGS பணியாளர்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

## பண்டங்கள் மற்றும் சேவைகளை வாங்குதல்

SGS பணியாளர் அல்லது அவரது நெருங்கிய உறவினர், நேரடியாகவோ மறைமுகமாகவோ, குறிப்பிடத்தக்க அளவில் பங்குகளை வைத்திருக்கின்ற அல்லது பிற நிதிசார் நலன்களைக் கொண்டிருக்கின்ற சப்ளையர் அல்லது வணிகக் கூட்டாளரிடம் தெரிந்தே பண்டங்களை வாங்குவது அல்லது சேவைகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது, இதில் பாதிக்கப்பட்ட பணியாளரின் நேரடி மேலாளரிடம் சாத்தியமுள்ள சச்சரவு அறிவிப்பட்டு, வாங்குதல் செயல்முறையில் அந்த பாதிக்கப்பட்ட பணியாளர் பங்கேற்காமல் இருப்பது மட்டுமே விதிவிலக்கு.

பணியாளர்கள் அல்லது அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் விற்பனை, நிர்வாகம் அல்லது இயக்குனர் பதவியில் இருக்கின்ற சப்ளையர் அல்லது வணிகக் கூட்டாளரை தேர்ந்தெடுக்கும் வாங்குதல் செயல்முறையில் பங்கேற்ற SGS பணியாளர்கள் தடை செய்யப்பட்டுள்ளனர்.

## நெருங்கிய உறவினர்களை பணியில் அமர்த்துதல்

ஒரு SGS பணியாளரின் நெருங்கிய உறவினரை பணியில் அமர்த்துவதற்கு பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு இணங்க முன்கூட்டி அனுமதியளித்தல் தேவைப்படுகிறது. ஒரு நெருங்கிய உறவினரை பணியில் அமர்த்தும் செயல்முறையில் பங்கேற்பது, மேற்பார்வை செய்வது அல்லது ஏதேனும் செல்வாக்கு செலுத்துவதில் இருந்தும், நெருங்கிய உறவினருக்குப் பதவி உயர்வு அல்லது இழப்பீடு வழங்குவது போன்ற வேலைவாய்ப்பு வகையில் மேற்பார்வையிடுதல், நிர்வகித்தல் அல்லது ஏதேனும் செல்வாக்கு செலுத்துதலில் இருந்தும் SGS பணியாளர்கள் தடை செய்யப்படுகிறார்கள்.

SGS பணியாளர்கள் SGS இல் வெளிப்படையான வேலை வாய்ப்புகளுக்கு நெருங்கிய உறவினர்களைப் பரிந்துரைக்கலாம் என்றாலும் விண்ணப்பதாரர்களிடம் எத்தகைய நிறுவன உள்ளார்ந்த தகவல்களையும் பகிர்ந்துகொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

## SGSக்கு அப்பாற்பட்ட இயக்குனர் பணி

SGSக்கு அப்பாற்பட்ட நிறுவனத்தின் இயக்குனரவையில் சேவையாற்றுவது, தொழில்முறையான அல்லது வர்த்தக கூட்டாளராக வேறு நிறுவனத்தில் இருப்பதற்கு பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு இணங்க முன்கூட்டி அனுமதியளித்தல் தேவைப்படுகிறது.

## அரசியல் அலுவல்

எந்த மட்டத்திலான அரசியல் அலுவலில் இருப்பதற்கும் பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு இணங்க முன்கூட்டி அனுமதியளித்தல் தேவைப்படுகிறது.

## SGSக்கு வெளியில் பணிபுரிதல்

சுய வேலைவாய்ப்பு மற்றும் கூடுதல் வணிகம் உட்பட SGSக்கு வெளியில் இரண்டாவது வேலை அல்லது பணியில் இருப்பதற்குப் பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு இணங்க முன்கூட்டி அனுமதியளித்தல் தேவைப்படுகிறது.
இருப்பினும், SGS வேலைவாய்ப்பில் இருக்கும்போது பணியாளர் சேவை செய்த SGS வாடிக்கையாளருக்காக பணிபுரிவது, SGS சப்ளையர் அல்லது வணிகக் கூட்டாளருக்குப் பணிபுரிவது, SGS போட்டியாளர் அல்லது SGS உடன் போட்டியிடுபவருக்குப் பணிபுரிவது அல்லது SGS வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளராக வாய்ப்புள்ளவருக்கு எந்த வகையான தொழில்முறை அல்லது ஆலோசனை சேவைகள் வடிவிலும் வழங்குவது அல்லது பங்கேற்பது ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

## வெளிப்புற முதலீடு

ஒரு SGS வாடிக்கையாளர், சப்ளையர், வணிகக் கூட்டாளர் அல்லது போட்டியாளரிடம் தனிப்பட்ட முறையில் முதலீடு செய்வதானது, பங்கு வர்த்தகத்தில் பொதுவில் விற்கப்படும் பங்குகளை வாங்குதலைத் தவிர்த்து தடைசெய்யப்படுகிறது.



# பரிசுகள், பொழுதுபோக்கு மற்றும் உபசரிப்பு

## பொதுவான கொள்கைகள்

SGS-இன் மதிப்புக்கு பங்கம் விளைவிக்க சாத்தியமுள்ள, அல்லது வணிக முடிவுகளில் தகாத விதத்தில் செல்வாக்கைச் செலுத்துகின்ற அல்லது அவ்வாறு செல்வாக்கைச் செலுத்தும் தோற்றத்தை ஏற்படுத்துகின்ற பரிசு, பொழுதுபோக்கு அல்லது உபசரிப்பு எதுவும், எந்த வடிவத்தில் இருந்தாலும் அவை கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும்.

## SGS பணியாளர்களுக்கான பரிசு வழங்காமை கொள்கை

தற்போது இருந்துவரும் வாடிக்கையாளர்கள் அல்லது வாடிக்கையாளர்களாக வாய்ப்புள்ளவர்கள், சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களிடமிருந்து எந்த வகையான பரிசு, ரொக்கம், டிப் அல்லது கடனையும் ஏற்றுக்கொள்வதிலிருந்து SGS பணியாளர்கள் தடைசெய்யப்பட்டுள்ளனர். காலண்டர்கள், பேனாக்கள் மற்றும் நோட்பேடுகள் மற்றும் உணவு மற்றும் பானங்கள் போன்ற அழியக்கூடிய பொருட்கள் போன்ற பெயரளவுக்கு மதிப்புள்ள விளம்பரம் செய்யப்படும் பிராண்ட் பொருட்கள் மட்டுமே இவற்றில் விதிவிலக்கு. உள்ளூர் கொள்கைகளுக்கு ஏற்ப அழியக்கூடிய பொருட்கள் SGS துணை நிறுவன பணியாளர்களுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டு விநியோகிக்கப்பட வேண்டும்.

பெற்றுக்கொண்ட பரிசானது திருப்பிக் கொடுப்பது அவமதிப்பது போன்ற சூழ்நிலைக்குக் காரணமாகலாம் என்றால், உள்ளூர் கொள்கைகளுக்கு ஏற்ற பொருத்தமான முறையில் தீர்ப்பதற்கான வழிமுறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், எடுத்துக்காட்டாக, ஒரு அறக்கட்டளைக்கு நன்கொடை அளிப்பது.

## SGS பணியாளர்களுக்கு வழங்கப்படும் கேளிக்கை மற்றும் உபசரிப்பு

கேளிக்கை அல்லது உபசரிப்பை ஏற்றுக்கொள்வதற்கு SGS பணியாளர்கள் தடைசெய்யப்பட்டுள்ளனர், அதாவது, அந்த அன்பளிப்பானது SGS ஆல் செய்து தரப்பட்ட சேவைகளோடு தொடர்புகொண்டிருக்கும்போது அல்லது தற்போது இருந்துவரும் வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளராவதற்கு சாத்தியமுள்ளோர் மற்றும் வணிகக் கூட்டாளர்களால் வாங்குதல் செயல்முறையிலோ அல்லது சப்ளையர்கள் அல்லது வணிகக் கூட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலோ சம்பந்தப்பட்டிருக்கும் SGS பணியாளர்களுக்கு வழங்கப்படும்போது ஏற்றுக்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

தற்போது இருந்துவரும் வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளராவதற்கு சாத்தியமுள்ளோர், சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களால் வழங்கப்பட்ட அனைத்து கேளிக்கை மற்றும் உபசரிப்பையும் முன்கூட்டியும், பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு இணங்கவும் SGS பணியாளர்கள் தெரியப்படுத்தியாக வேண்டும்.

முன்கூட்டியே தெரியப்படுத்துவதற்கு சூழ்நிலைகள் ஒத்துழைக்கவில்லை என்றால், கேளிக்கை அல்லது உபசரிப்பை பெற்றுக்கொண்ட பின்னர் உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.

## SGS ஆல் மூன்றாம் தரப்பினர்களுக்கு வழங்கப்படும் பரிசுகள் மற்றும் உபசரிப்பு

ஒரு பெறுனருக்கு ஒரு காலண்டர் ஆண்டில் மொத்த மதிப்பு CHF 100க்கு மிகாமல் காலண்டர்கள், பேனாக்கள் மற்றும் நோட்பேடுகள் ஆகியவற்றோடும் உணவு மற்றும் பானங்கள் போன்ற வீணாகக்கூடிய பொருட்கள் போன்ற பெயரளவுக்கு மதிப்புள்ள சிறு விளம்பர SGS பிராண்ட் பொருட்கள் தவிர்த்து மூன்றாம் தரப்பினர்களுக்கு எந்த வகையிலும் பரிசு, ரொக்கமாக, இலவசமாக அல்லது கடனாக வழங்குவதற்கும் SGS பணியாளர்கள் தடைசெய்யப்பட்டுள்ளனர்.

விதிவிலக்கு எதற்கும் பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு இணங்க முன்கூட்டி அனுமதி பெற வேண்டும்.

மூன்றாம் தரப்பினருக்கு வணிகரீதியான உணவுகள் தவிர்த்து பயணம், தங்குமிடம் அல்லது ஏதேனும் உபசரிப்பு வழங்குதலுக்கு பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு இணங்க முன்கூட்டி அனுமதி பெற வேண்டும்.

# நியாயமான போட்டி

போட்டி மற்றும் நியாயமான சந்தை நடைமுறைகளைப் பயன்படுத்தி SGS தனது வணிகத்தை நடத்துவதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது.

தகாத விதத்தில் சந்தை நிலைகளில் செல்வாக்கைச் செலுத்துவதற்கோ, நியாயமற்ற விதத்தில் சந்தை அனுகூலத்தைப் பெறவோ, SGS பணியாளர்கள் மூன்றாம் தரப்பினருடன் எவ்விதமான ரகசிய உடன்படிக்கைகளையும் செய்துகொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

விலை நிர்ணயங்கள், ஒப்பந்த விதிமுறைகள், சந்தை ஒதுக்கீடுகள், பிரதேசப் பிரிவுகள் அல்லது வாடிக்கையாளர்கள் பற்றி போட்டியாளர்களுடன் SGS பணியாளர்கள் ஆலோசனையில் ஈடுபடக் கூடாது.

SGS தன்னுடைய சேவை மற்றும் திறன்களை ஏமாற்றக்கூடிய அல்லது தவறான வழியில் சந்தைப்படுத்துவதுமில்லை, போட்டியாளர்கள் குறித்து இகழ்ச்சியான அல்லது உண்மையற்ற குற்றச்சாட்டுகளை கூறுவதுமில்லை.

சட்டவிரோதமான அல்லது நெறிமுறைக்கு மாறான முறைகளைப் பயன்படுத்தி போட்டியாளர்கள் குறித்த ரகசிய தகவல்களை SGS பெறுவதில்லை.

# நன்கொடைகள் மற்றும் ஸ்பான்சர்ஷிப்கள்

## அரசியல் அல்லது மதம்சார் நன்கொடைகள் கிடையாது

தான் செயல்படுகின்ற ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் நடவடிக்கைகளில் நடுநிலையை பின்பற்றுவது என்ற கடுமையான கொள்கையை SGS கொண்டிருக்கிறது. SGS நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த அரசியல் கட்சிக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிக்கும், அரசு அலுவலக வேட்பாளருக்கும், அரசியல் பிரச்சாரங்கள் அல்லது மத நிறுவனங்களுக்கும் ஆதரவளிப்பதோ அவர்களுக்கும் நிதிகள் அல்லது மூலவளங்களை வழங்குவதோ இல்லை.

## அறக்கட்டளை நன்கொடைகள் மற்றும் ஸ்பான்சர்ஷிப்

தொண்டு நிறுவனங்களுக்கு SGS அளிக்கும் நன்கொடைகள், லாப நோக்கற்ற சமூகங்களின் திட்டங்களுக்கு SGS வழங்கும் நேரடிப் பங்களிப்புகள், SGS-ஐ விளம்பரப்படுத்துவதற்கான ஸ்பான்சர்ஷிப்கள் ஆகியவற்றுக்கு, பொருந்தக்கூடிய SGS குழுமக் கொள்கைகளுக்கு இணங்க முன்கூட்டிய ஒப்புதல் அவசியம்.

இலாபத்திற்கல்லாத திட்டங்கள் மற்றும் ஸ்பான்சர்ஷிப்களுக்கான அறக்கட்டளை நன்கொடைகள், நேரடி பங்களிப்புகளானவை ஒருவருக்கு, SGS அல்லது பிற மூன்றாம் தரப்பினர் மீது செல்வாக்கு செலுத்தும் நோக்கம் கொண்டதாக அல்லது அப்படித் தோன்றினால் அனுமதிக்கப்படுவதில்லை.


SGS
SIOEN
VENTIS MX4

# சொத்துகளைப் பாதுகாத்தல்

## வணிக சொத்துகள் மற்றும் வளங்கள்

### நிறுவனத்தின் சொத்துகள் மற்றும் நிதிகளைப் பாதுகாத்தல்

SGS மற்றும் மூன்றாம் தரப்பினரின் சொத்துகள், மூலவளங்கள் மற்றும் நிதிகளைப் பாதுகாக்க வேண்டிய கடமை SGS பணியாளர்களுக்கு உள்ளது என்பதுடன் அவர்கள் அவற்றை தகாத முறையிலோ தனிப்பட்ட நலன்களுக்காக எந்த வடிவத்திலுமோ பயன்படுத்தக் கூடாது.

### தகவல் தொழில்நுட்ப மூலவளங்களைப் பயன்படுத்துதல்

நிறுவனத்தின் கணினிகள், நெட்வொர்க் அமைப்புகள் மற்றும் மின்னணு தகவல்தொடர்பு கருவிகள் ஆகியவை பொருந்தக்கூடிய SGS குழும கொள்கைகளுக்கு ஏற்ப முற்றிலும் தொழில்சார்ந்த நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

மின்னஞ்சல், இணையம் மற்றும் பிற மின்னணு தகவல்தொடர்பு பயன்முறைகள் ஆகியவை தவறாகப் பயன்படுத்தப்படுவதாக சந்தேகம் எழும்போது SGS ஆல் கண்காணிக்கப்பட்டு தணிக்கை செய்யப்படலாம்.

### இரகசியத்தன்மை

வணிக நடைமுறையில் SGS பணியாளர்களால் வழங்கப்படும் ரகசிய தகவல்களை SGS மதிக்கவும் பாதுகாக்கவும் செய்கிறது என்பதுடன் எதிராபாரத வகையில் வெளியிடப்படுவதைத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

முறைப்படியான வணிக நோக்கத்தை தவிர்த்து ரகசிய தகவல்களை எந்தப் பணியாளரும் அணுகுவதற்கு முயற்சிக்கக் கூடாது.

SGS தகவல்களின் ரகசியத்தன்மையை பணியாளர்கள் பாதுகாக்க வேண்டும் என்பதுடன் SGS, அதனுடைய வணிகம், நிதிசார்ந்த செயல்பாடு, முதலீடுகள், வியூகங்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் குறித்த எத்தகைய முக்கியமான தகவல்களையும் வெளியிடவோ ஆலோசிக்கவோ கூடாது. வேலைவாய்ப்பு உறவு முடிந்த பின்னரும்கூட இந்தக் கடமை தொடர்கிறது.

### அறிவுசார் சொத்து

SGS தன்னுடைய அறிவுசார் சொத்தை பாதுகாத்துக்கொண்டு மற்றவர்களுடைய சொத்திற்கும் மதிப்பளிக்கிறது.

SGSக்குச் சொந்தமான அறிவுசார் சொத்தானது செயல்முறைகள், வடிவமைப்புகள், முறைகள், செயல்பாட்டு நடைமுறைகள், வர்த்தக மற்றும் சந்தை வியூகங்கள், வாடிக்கையாளர் தகவல்கள், விலை நிர்ணயித்தல் மற்றும் செலவின முறைகள் உள்ள பல வடிவங்களில் இருக்கலாம்.

SGSக்குச் சொந்தமான அறிவுசார் சொத்தானது போட்டித்திறன் அனுகூலத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதுடன் அவை வெளியிடப்படுவது அல்லது தவறாகப் பயன்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

### தனிப்பட்ட பாதுகாப்பு

SGS வளாகங்களும் தொழிலகங்களும் அனைத்து SGS பணியாளர்கள், பார்வையாளர்கள் மற்றும் பிற பங்காளர்களுக்கும் ஒரு பாதுகாப்பான பணிச்சூழலை வழங்க வேண்டும்.

பாதுகாப்பு இடர்பாடுகளை மதிப்பிடுவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் மேலாளர்கள் மேற்கொண்டு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

## வணிகப் பதிவுகளில் நேர்மை

### உண்மை, துல்லியம் மற்றும் முழுமையான பதிவுகள்

காகித வடிவிலும் டிஜிட்டில் வடிவிலும் இருக்கின்ற SGS வணிகம் மற்றும் நிதிநிலை பதிவுகள் முழுமையானவையாக, உண்மையானவையாக, துல்லியமானவையாக மற்றும் நியாயமானவையாக இருக்க வேண்டும்.

அனைத்து தகவல்களும் பரிவர்த்தனைகளும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் SGS குழும கொள்கைகளுக்கு ஏற்ப உரிய நேரத்தில் கோப்பிடப்பட்டு ஆவணக்காப்பகத்தில் வைக்கப்பட வேண்டும்.

SGS பணியாளர்கள் செய்வதற்குத் தடைசெய்யப்பட்டுள்ள சில செயல்பாடுகள்:

- வணிகம் அல்லது நிதிநிலை பதிவுகளை பொய்யாக அல்லது தவறாகக் குறிப்பிடுதல்
- SGS குழும கொள்கைகள், நடைமுறைகள் அல்லது பொருந்தக்கூடிய சட்டங்களை மீறும் வகையில் வணிகப் பதிவுகளை மாற்றுதல் அல்லது அழித்தல்
- குறிக்கோள்கள் அல்லது இலக்குகளை அடையும் வகையில் விற்பனை எண்ணிக்கையை தவறாகக் குறிப்பிடுதல் அல்லது மாற்றுதல்
- பயணம் அல்லது பிற செலவினங்கள் தொடர்புடைய செலவினங்களை கோருவதற்கு தவறான அல்லது அதிகரித்த செலவினத்தை சமர்ப்பிப்பது
- தவறான அல்லது அதிக வேலை பார்த்ததற்கான அல்லது அதிக நேரம் வேலைப் பார்த்ததற்கான நேரத்தாள்களை சமர்ப்பிப்பது



# வெளிப்புறத் தகவல்தொடர்பு

## முழுமையான மற்றும் துல்லியமான தகவல்கள்

SGS தன்னுடைய வணிகம் மற்றும் செயல்பாடுகள் குறித்த முழுமையான, துல்லியமான மற்றும் வெளிப்படையான தகவல்களை தன்னுடைய பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டாளர்கள், சந்தை மற்றும் சமூகம் அனைவருக்குமே வழங்க வேண்டிய சட்டப்பூர்வமான கடமையை கொண்டிருக்கிறது. SGS இன் வணிகம் மற்றும் அதன் நிதிசார் செயல்திறன் குறித்து பங்குதாரர்கள், முதலீட்டாளர்கள், ஊடகத்தினர் மற்றும் பொதுமக்களுடனான தகவல்தொடர்புகளை அதற்கென்று அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

## தகவல்களை வெளியிடுதல்

SGS பிராண்ட் மற்றும் நற்பெயரைப் பாதுகாப்பதற்குப் பின்வரும் தரநிலைகளை பின்பற்ற வேண்டும் என பணியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

- எந்தப் பணியாளரும் ஊடகத்திடம், நிதிநிலை பகுப்பாய்வாளரிடம் அல்லது தற்போதுள்ள முதலீட்டாளர் அல்லது முதலீட்டாளராவதற்கு வாய்ப்புள்ளவர்களிடம் SGS சார்பாக பேசவோ அல்லது ஆலோசிக்கவோ அல்லது SGS குறித்த தகவல்களை வெளிப்படுத்தவோ கூடாது என்பதுடன் அனுமதிக்கப்பட்டிருந்தால் தவிர SGS சார்பாக எத்தகைய பொது அறிக்கைகளையும் வெளியிடக் கூடாது
- மதம், அரசியல் அல்லது எத்தகைய பரபரப்பான விஷயங்கள் குறித்த தனிப்பட்ட அபிப்பிராயங்களை SGS அதிகாரப்பூர்வ கடிதத் தாள், மின்னஞ்சலில் வெளிப்படுத்தக் கூடாது அல்லது எந்த வகையிலும் அத்தகைய அபிப்பிராயங்கள் அல்லது கருத்துகள் SGSஐ கருத்தில் கொள்வதாகத் தோன்றக்கூடாது
- ஆன்லைன் கலந்துரையாடல் மன்றங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பங்கேற்கும்போது, SGS பணியாளர்கள் விதிமுறை மற்றும் பொருந்தக்கூடிய SGS குழுமக் கொள்கைகளுக்கு இணங்க நடந்துகொள்ள வேண்டும்



# மரியாதையுடன் செயல்படுதல்

## தொழிலாளர் உறவுகள்

SGS தனது பணியாளர்கள் அனைவரின் மனித உரிமைகளையும், வேலைவாய்ப்பு உரிமைகளையும் மதிக்கிறது என்பதுடன் தான் செயல்படும் நாடுகளில் உள்ள தொழிலாளர் ஒழுங்குமுறைகள் மற்றும் சட்டங்களைக் கடைப்பிடிக்கிறது.

### பணியாளர்களை கௌரவத்துடன் நடத்துதல்

தொழிலாளர் யாரும் தனது விருப்பத்திற்கு மாறாக வேலை செய்ய வேண்டிய அல்லது சுய கௌரவத்தை இழந்த நிலையில் வேலை செய்ய வேண்டிய அவசியமுள்ள எந்த வகையான தொழிலாளர் ஈடுபாட்டையும் SGS பயன்படுத்துவதில்லை.

குழந்தை தொழிலாளர் அல்லது கட்டாய உழைப்பு SGS இல் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. குழந்தை தொழிலாளர் அல்லது கட்டாய உழைப்பை பயன்படுத்தும் சப்ளையர்கள் அல்லது வணிகக் கூட்டாளர்களின் சேவைகளை SGS பயன்படுத்துவதில்லை.

தான் செயல்படுகின்ற நாடுகளில் குறைந்தபட்ச ஊதியத்தை SGS மதிக்கிறது என்பதுடன் ஊதியம் மற்றும் அவற்றின் வளர்ச்சி குறித்து உள்ள சட்ட அமைப்பு மற்றும் கூட்டு பேர உடன்பாடுகளாலும் தீர்மானிக்கப்படுகின்ற அனைத்து கட்டாய தேவைகளுக்கும் இணங்குகிறது.

### கூட்டுசேரும் சுதந்திரம்

தொழிற்சங்கங்களை அமைக்கவும் அவற்றில் சேரவும், கூட்டாக பேரம் பேசுவதற்குமான தனது பணியாளர்களின் உரிமையை SGS அங்கீகரிக்கிறது.

கூட்டுசேரும் சுதந்திரம் அல்லது கூட்டாக பேரம் பேசுவதற்குள்ள சுதந்திரம் சட்டத்தால் தடைசெய்யப்பட்டிருக்கும் சூழ்நிலைகளில் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடல் மற்றும் பேரம் பேசுதலுக்கு இணையான உரிமைகளை SGS ஏற்படுத்தித் தருகிறது.

## ஒடுக்குதல் & தொந்தரவிழைத்தல்

SGS பணியாளர்கள் கட்டாயமாக எல்லோரையும் மதித்து நடத்த வேண்டும். துன்புறுத்துதல், தொந்தரவிழைத்தல் அல்லது தகாத விதத்தில் நடந்துகொள்ளுதல் ஆகியவை எந்த வடிவிலும் கடுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

துன்புறுத்துதல் மற்றும் தொந்தரவிழைத்தல் உடல்ரீதியான, பாலியல்ரீதியான அல்லது உளவியல்ரீதியான துன்புறுத்தலாக ஏற்படலாம். ஒருவர் அச்சுறுத்தப்படுவதாகவோ பாதுகாப்பற்று இருப்பதாகவோ உணரக்கூடிய வகையிலான எந்தச் செயல்களையும் SGS பணியாளர்கள் ஒருபோதும் செய்யவோ, அவ்வாறு நடந்துகொள்ளவோ கூடாது. பாலியல் சீண்டல்கள், பாலியல் அனுசரிப்புக் கோரிக்கைகள், முறையற்ற உடல்ரீதியான தொடர்பு மற்றும் பிற வாய்வழியான அல்லது உடல்ரீதியான பாலியல் இயல்புகொண்ட துன்புறுத்தல் அல்லது பிற வகைப்பட்டவை சகித்துக்கொள்ளப்படாது.

## பாகுபாடு காட்டாமல் இருத்தல்

அனைத்து பணியாளர்களும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்படுகின்ற ஒரு பன்முக, ஒருமைப்பாடுமிக்க பணியிடத்தை தக்கவைத்துக்கொள்ள SGS பொறுப்பேற்றுள்ளது. SGS பணியாளர்கள் அனைவரும் வேலை சம்பந்தப்பட்ட தங்களின் திறன்கள், தகுதிகள், நடத்தை மற்றும் செயல்திறனின் அடிப்படையிலேயே நடத்தப்படவும் மதிப்பீடு செய்யப்படவும் வேண்டும்.

இனம், நிறம், இனக்குழு, சமூகத் தோற்றம், பாலியல், பாலினம், பாலியல் நோக்குநிலை, வயது, உடல் ஊனம், மருத்துவ நிலை, மதம், தேசியம், அரசியல் தொடர்பு அல்லது தொழிற்சங்க உறுப்பினர் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், சம வாய்ப்பு என்ற கொள்கையின் அடிப்படையில் வேலை உறவின் அனைத்து அம்சங்களையும் SGS அடிப்படையாகக் கொண்டுள்ளது. பாகுபாடு காட்டுதல் சகித்துக்கொள்ளப்படாது.

## தரவுத் தனியுரிமை

### தனிப்பட்ட தரவை மதித்தல்

SGS பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினரின் தரவுகளை, பொருந்தக்கூடிய SGS குழுமக் கொள்கைகளுக்கு இணங்க, SGS முழு மரியாதை மற்றும் கவனத்துடனே சேகரித்து, நிர்வகித்து செயலாக்குகிறது.

தரவிற்குச் சம்பந்தப்பட்டவர்களிடம் அவர்களுடைய உரிமைகள் தெரிவிக்கப்படுவதை SGS உறுதிப்படுத்துகிறது.

### தனிப்பட்ட தரவை பாதுகாத்தல்

தனிப்பட்ட தரவானது சட்டப்படியான மற்றும் வணிக நோக்கங்களுக்காகவே அணுகப்படவும், செயலாக்கப்படவும், பயன்படுத்தப்பட்டு பகிர்ந்துகொள்ளப்படவும் வேண்டும் என்பதுடன் தரவு சம்பந்தப்பட்டவர்களின் முன்கூட்டிய வெளிப்படையான ஒப்புதலும் பெறப்பட்டிருக்க வேண்டும். தனிப்பட்ட தரவானது தேவையான காலத்திற்கு மட்டுமே தக்க வைத்திருக்கப்பட்டு, சேமிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.



# உடல்நலம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல்

அனைத்து SGS பணியாளர்கள், பார்வையாளர்கள் மற்றும் பிற பங்காளர்களை முழுமையாகப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது என்பதுடன் நேரடி சொத்துகள் மற்றும் வேலை தொடர்பான விபத்து, சீர்கேடு மற்றும் எத்தகை சேதத்திலிருந்தும் பாதுகாக்கின்ற பொறுப்பும் SGS-க்கு உள்ளது.

## உடல்நலன் மற்றும் பாதுகாப்பு

காயம் மற்றும் தொழில்சார்ந்த உடல்நலக்குறைவு ஏற்படும் இடர்பாட்டை தடுப்படுதற்கு, SGS பணியாளர்கள் பின்வரும் குறைந்தபட்ச தேவைகளுக்கு உடன்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது:

- உடல்நலன் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்துகின்ற உளப்பூர்வமான மற்றும் பொறுப்புணர்வுள்ள முடிவுகளை எடுப்பதற்கு பாதுகாப்பான வேலை நடைமுறைகள் மற்றும் பொருத்தமான வழிகாட்டுதலை பின்பற்றவும்
- தனிநபரின் உடல்நலன் மற்றும் பாதுகாப்பு மற்றும் வேலையிடத்தில் இருக்கும் மற்ற அனைவரது நலனையும் உறுதிப்படுத்தும் முறையில் அனைத்து பணி கடமைகளையும் மேற்கொள்ளவும்
- பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச் சூழலை உருவாக்கவும் தக்க வைக்கவும் சக பணியாளர்களை ஊக்கப்படுத்தவும்
- SGS குழும கொள்கைகள் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டங்கள் கோருவதன்படி எந்த பணி சம்பந்தப்பட்ட விபத்து அல்லது மாசுபாட்டு நிகழ்வையும் புகாரளித்து பதிவுசெய்யவும்

விபத்து அல்லது மாசுபாட்டு நிகழ்வை புகாரளித்து பதிவுசெய்வதற்காக எந்தப் பணியாளரும் தண்டிக்கப்பட மாட்டார்கள்.

## சுற்றுச்சூழல்

SGS வளாகங்களிலும் SGS வாடிக்கையாளர்களிடமும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் செயல்படுவதன் மூலமும், பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல் குறித்த சட்ட தேவைகளைப் பின்பற்றி நிறைவேற்றுவதன் மூலமும் சுற்றுச்சூழலை பாதுகாத்து மேம்படுத்துவதற்கு SGS பணியாளர்கள் பங்களிக்கலாம்.



# சட்டங்களுக்கு இணங்குதல்

## சட்டங்களுடனான இணக்கம்

தான் செயல்படுகின்ற நாடுகளின் பொருந்தக்கூடிய சடங்களுக்கு SGS இணங்குகிறது. SGS இன் செயல்பாடுகளைக் கொண்டிருக்கும் சட்ட அமைப்பு சிக்கலானதாக இருக்கலாம். பணியாளர்கள் தங்கள் தினசரி வேலைக்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். தெரியாது என சட்டத்திலிருந்து நழுவ முடியாது.

இந்த விதித்தொகுப்பு அல்லது SGS குழும கொள்கைகளானவை பொருந்தக்கூடிய சட்டங்களால் கட்டாயமாக்கப்பட்டுள்ளவற்றைக் காட்டிலும் மிகவும் கண்டிப்பான தரநிலைகளை விதித்திருக்கும்போது பணியாளர்கள் மிகவும் கண்டிப்பான தரநிலைகளையே பின்பற்ற வேண்டும்.

பணியாளர்கள் நியாயமான விசாரணை தொடர்பாக ஆதாரங்களை மறைக்கவோ, ஆவணங்களை அழிக்கவோ, தவறாக வழிநடத்தவோ, பிற வழிகளில் தடங்கலை ஏற்படுத்தவோ முயற்சி செய்யக் கூடாது.

## ஊழல் எதிர்ப்பு

எந்த வடிவத்திலான ஊழலிலும் SGS ஈடுபடுவதோ, சகித்துக்கொள்வதோ அல்லது மன்னிப்பதோ இல்லை.

### நடப்பிலுள்ள ஊழல்

SGS பணியாளர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பின்வரும் நோக்கத்திற்காக நிதி ஆதாயங்கள் அல்லது பிற எந்த ஆதாயங்களையும் வழங்கவோ, செலுத்தவோ, தருவதாக உறுதியளிக்கவோ, அல்லது ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடவோ கூடாது:

- மூன்றாம் தரப்பினரின் முடிவில் செல்வாக்கு செலுத்துதல்
- SGS அல்லது ஒரு மூன்றாம் தரப்பினரின் சார்பாக வணிகத்தை பாதுகாப்பது
- SGSக்காக, தனக்காக அல்லது மூன்றாம் தரப்பினருக்காக முறையற்ற அனுகூலம் அல்லது ஆதாயத்தை தேடித்தருவது

SGS பணியாளர்கள் அரசாங்க அதிகாரிகளுக்கு பேமெண்ட்டுகள் வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது.

பேமெண்ட்டுகளுக்கான வசதி செய்து தருவது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் பேமெண்ட்டுகளுக்கான வசதி செய்வதற்கு அதிகாரிகள் கேட்பதற்கு மறுப்பு தெரிவிக்க வேண்டும்.

### முனைப்பற்ற ஊழல்

SGS பணியாளர்கள் பின்வரும் நோக்கத்திற்காக நேரடியாகவோ மறைமுகமாகவோ நிதி ஆதாயங்கள் அல்லது பிற எந்த ஆதாயங்களையும் கோரவோ, ஏற்கவோ, ஏற்பதாக ஒப்புக்கொள்ளவோ, அல்லது ஊழல் செய்கைகளில் ஈடுபடவோ கூடாது:

- SGS பணியாளரின் முடிவில் செல்வாக்கு செலுத்துதல்
- மூன்றாம் தரப்பினருக்காக முறையற்ற அனுகூலம் அல்லது பலனை பெற்றுத்தர SGS பணியாளரை ஊக்கப்படுத்துதல்
- கண்டுபிடிப்புகளைத் தவறாகக் குறிப்பிடுதல் அல்லது ஆய்வுகள், சான்றிதழ்கள், தணிக்கைகள் அல்லது சோதனையின் முடிவுகளை மாற்றுதல்

### ஊழலை புகாரளித்தல்

ரொக்கம், இனாம், கடன்கள், பரிசுகள், கேளிக்கை, உபசரிப்பு, ஊக்கத்தொகை, ஆதாயங்கள், அனுகூலங்கள், உதவிகள் அல்லது பலவந்தம், கட்டாயம் அல்லது அச்சுறுத்தல்கள் என எந்த வடிவத்திலும் லஞ்சத்திற்கான கோரிக்கை பெறுகின்ற அல்லது லஞ்சம் வழங்கும் வாய்ப்பை பெறுகின்ற எந்த SGS பணியாளரும் தங்களுடைய மேலாளர் மற்றும் SGS நேர்மை உதவிமையம் வழியாக இந்த விஷயத்தை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

லஞ்சம் வழங்கவோ அல்லது பெறுவதற்கோ, உதவிக்கான உறுதியளிப்பதற்கோ வசதியேற்படுத்தல் பேமெண்ட்டிற்கோ அல்லது ஊழல் செயல்பாடுகளில் ஈடுபடவோ மறுக்கின்ற SGS பணியாளர் யாரும் தண்டிக்கப்பட மாட்டார்கள்.

## உள்ளாள் வணிக மோசடி

SGS ஆல் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படாவிட்டால் அந்தத் தகவல் பொதுவில் வைக்கப்படாது. மேலும், வாடிக்கையாளர்கள் அல்லது மூன்றாம் தரப்பினர்கள் குறித்து பொதுவில் வைக்கப்படாத முக்கியமான தகவல்களை SGS சிலநேரங்களில் பெறுவதுண்டு. உள்ளாள் தகவல்களில் வழக்கமாக பொதுவில் வைக்கப்படாத நிதிநிலை முடிவுகள், வியூகத் திட்டங்களின் வரைவுகள், இணைப்புகள் மற்றும் வாங்குதல்களுக்கான முன்மொழிவுகள் மற்றும் மேல்மட்ட நிர்வாகத்தில் திட்டமிடப்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவை அடங்கும்.

இந்த வகையில்:

- SGS, அதன் வாடிக்கையாளர்கள் அல்லது மூன்றாம் தரப்பினர் தொடர்பாக பொதுவில் கிடைக்காத தகவல்களின் அடிப்படையில் பணியாளர்கள் தங்களது தனிப்பட்ட முதலீட்டைச் செய்ய அல்லது வணிக வாய்ப்புகளைப் பெற முயற்சி செய்யக் கூடாது
- SGS, அதன் வாடிக்கையாளர்கள் அல்லது மூன்றாம் தரப்பினர் பொதுவில் வைக்கப்படாத தகவல்களில் இருக்கும்போது வெளியிடும் பங்குகள், வாய்ப்புகள் மற்றும் பிற பத்திரங்களை வர்த்தகம் செய்வதற்கு பணியாளர்கள் தடை செய்யப்பட்டுள்ளனர்
- உள்ளாள் தகவல்களின் அடிப்படையில் ரகசியத் தகவல்களை வெளிப்படுத்துதல் அல்லது மூன்றாம் தரப்பினர்களுக்கு முதலீட்டு உதவிக்குறிப்புகளை வழங்குவதற்கு பணியாளர்கள் தடை செய்யப்பட்டுள்ளனர்

## தடைகள் மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகள்


வர்த்தகத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்புடைய பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு SGS இணங்குகிறது. இந்த வகையில்:

- SGS பணியாளர்கள் தடை விதிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினருடன் வணிகம் செய்வதும், தடை விதிக்கப்பட்ட வணிகப் பரிவர்த்தனைகள் எதிலும் ஈடுபடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது
- SGS பணியாளர்கள் பொருந்தக்கூடிய வர்த்தகக் கட்டுப்பாட்டுத் தடைகளுக்கு இணங்க வேண்டும்
- பொருந்தக்கூடிய தடைகள் அல்லது வர்த்தகக் கட்டுப்பாடுகளிலிருந்து தப்பிக்க எந்த மூன்றாம் தரப்பினருக்கும் உதவ SGS பணியாளர்கள் தடைசெய்யப்பட்டுள்ளனர்

## பணச்சலவை மற்றும் குற்றங்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் நிதியளித்தல்

கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல், தீவிரவாதம் அல்லது பிற குற்ற நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க வசதி ஏற்படுத்தித் தருவதற்கான எந்த முயற்சிக்கும் எதிராக போராடுவதற்கு SGS பொறுப்பேற்றுள்ளது.

கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல், தீவிரவாதம் அல்லது பிற குற்ற நடவடிக்கைகளுக்கு நிதியளிக்கும் வகையில் சந்தேகிக்கின்ற எத்தகைய பரிவர்த்தனை அல்லது நடவடிக்கையையும் தெரிவிக்குமாறும், SGS நேர்மை உதவிமையம் மூலம் வழிகாட்டுதலை பெறுமாறும் SGS பணியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



## When you need to be sure

© SGS Société Générale de Surveillance SA. மே 2024 இல் வெளியிடப்பட்டது

SGS Headquarters
1 Place des Alpes
P.O. Box 2152
1211 Geneva 1
Switzerland

**sgs.com**